## வேலைவாய்ப்பு அறிவிப்பு

## மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம் - கிருஷ்ணகிரி மாவட்டம்

தொழில்நுட்ப உதவியாளர் - 1 பணியிடம்

ஒப்பந்த அடிப்படையில்

தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் வெளியிடப்பட்ட G.O.(2D) No.144, dated 16.09.2026-ன் அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்ட காலநிலை மாற்ற இயக்கத்தின் கீழ் தொழில்நுட்ப உதவியாளர் -1 பணியிடம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அரசாணையின்படி தொழில்நுட்ப உதவியாளர் பணிக்கு மாதம் ரூ.22,000/- ஊதியம் மற்றும் 19 மாதங்களுக்கான பணிக்காலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பணியுடன் தொடர்புடைய அலுவல் பயணங்களுக்காக Travel Head வழங்கப்பட்டுள்ளது.

**பணியிட விவரங்கள்**

தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியிடம் உள்ளது. இப்பணிக்கான மாத ஊதியம் ரூ.22,000/- ஆகும். பணிக்காலம் 19 மாதங்கள். பணியிடம் மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி ஆகும். சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற இயக்கம் தொடர்பான பணிகள் மற்றும் அரசு விதிமுறைகளின்படி ஒதுக்கப்படும் பிற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**கல்வித் தகுதி**

கீழ்க்கண்ட துறைகளில் ஏதேனும் ஒன்றில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்:

- உயிரியல் அறிவியல் (Life Science)
- சுற்றுச்சூழல் அறிவியல் (Environmental Science)
- வனவியல் (Forestry)
- வனவிலங்கு அறிவியல் (Wild life Science)
- பொது கொள்கை (Public Policy)
- தொடர்புடைய / இணையான துறைகள் (Related/Similar fields)

மேலும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அடிப்படை தட்டச்சுத் திறன் பெற்றிருக்க வேண்டும்.

**அனுபவம் மற்றும் திறன்கள்**

- குறைந்தபட்சம் 1 ஆண்டு தொடர்புடைய பணி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- குறிப்பாக அரசுத் துறை / அரசு அலுவலகத்தில் 1 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- Data Entry / Data Management அனுபவம்.

- அரசு அலுவலக கோப்பு பராமரிப்புஇ பதிவேடு பராமரிப்பு மற்றும் ஆவணப்படுத்துதல் அனுபவம்.
- MS Word, MS Excel, MS Power Piont ஆகியவற்றில் நல்ல திறன்.
- அரசு அறிக்கைகள், கடிதங்கள், புள்ளிவிவரங்கள் மற்றும் Power Piont Presentations தயாரிக்கும் திறன்.
- தரவு தொகுத்தல் மற்றும் அலுவலக ஆவணப் பணிகளில் அனுபவம்.
- நல்ல தகவல் தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்புத் திறன்.
- வயது மற்றும் குடியிருப்பு தகுதி
- விண்ணப்பதாரர் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவராக / குடியிருப்பாளராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும் போது 40 வயதைத் தாண்டியிருக்கக் கூடாது.

**முக்கிய பணிப் பொறுப்புகள்**

தொழில்நுட்ப உதவியாளர்:

1. மாவட்ட காலநிலை மாற்ற இயக்கப் பணிகளை ஒருங்கிணைத்தல்.
2. அரசு துறைகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
3. காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் நடவடிக்கைகளை கண்காணித்தல்.
4. காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் தரவுகளை சேகரித்து தொகுத்தல்.
5. அறிக்கைகள், அலுவல் கடிதங்கள், புள்ளிவிவரங்கள் மற்றும் Power Piont presentations தயாரித்தல்.
6. அரசு கோப்புகள் மற்றும் பதிவுகளை பராமரித்தல்.
7. கூட்டங்கள், பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல்.
8. களப்பணிகள் மற்றும் துறை சார்ந்த அலுவல் பயணங்களை மேற்கொள்ளுதல்.
9. காலநிலை மாற்றம் தொடர்பான சிறந்த நடைமுறைகளை ஆவணப்படுத்துதல்.
10. மாவட்ட காலநிலை அலுவலர் / இயக்குநரால் வழங்கப்படும் பிற பணிகளை மேற்கொள்ளுதல்.

DCCM வழிகாட்டுதலில் Technical Assistant-ன் முக்கிய பொறுப்புகளாக துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு, திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள், ஆவணப்படுத்துதல் மற்றும் DCCM செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தேர்வு முறை**

- விண்ணப்பங்களின் தகுதி பரிசீலனை

- நேர்முகத் தேர்வு
- தட்டச்சுத் தேர்வு
- தேவைக்கேற்ப 2-3 பேர் கொண்ட காத்திருப்புப் பட்டியல் பராமரிக்கப்படும்.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 30.10.2026

**தொடர்பு / அலுவலக முகவரி**

அறை எண் 78-ல் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கம்,

மாவட்ட ஆட்சியரகம், கிருஷ்ணகிரி - 635 115.

**//உண்மை நகல்//**

ஒம்/- ச. தினேஷ்குமார்,
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

மாவட்ட ஆட்சியருக்காக,
கிருஷ்ணகிரி.